இயக்கவூர்திகளின் விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாயம்/

3 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலி

**முன்னிலை திரு. T. பன்னீர்செல்வம், M.B.A., M.L.,**

இயக்கவூர்திகளின் விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாய நீதிபதி / 3 வது கூடுதல்

மாவட்ட நீதிபதி, திருநெல்வேலி

2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாள் புதன்கிழமை

**எம்.சி.ஓ.பி.எண்கள். 1478/2022, 1480/2022 மற்றும் 1481/2022**

(CNR.No. TNTL01-013727-2022, TNTL01-013730-2022 and TNTL01-013833-2022 )

.....

**MCOP. No.1478/2022**

1. இராபின்சன் பிலிப், த/பெ. பிரட்ரிக் ஜான், கிறிஸ்துவர், வயது 54, வசிக்குமிடம் க.எண்.520-9-1, கங்கா நகர், பரசுராமன்பட்டி, K. புதூர், மதுரை-625 007.
2. திருமதி. S. ராணி மேரி நேசமணி, க/பெ. இராபின்சன் பிலிப், வயது 52, வசிக்குமிடம் க.எண்.520-9-1, கங்கா நகர், பரசுராமன்பட்டி, K. புதூர், மதுரை-625 007.
3. Hezekiah ஜான் பிலிப், த/பெ. இராபின்சன் பிலிப், வயது 21, வசிக்குமிடம் க.எண்.520-9-1, கங்கா நகர், பரசுராமன்பட்டி, K. புதூர், மதுரை-625 007.

... மனுதாரர்கள்

// எதிர் //

1. T. குணசேகர், த/பெ. திரவியம், இந்து, வயது சுமார் 40, வசிக்குமிடம் க.எண்.75/10- வாகையடி தெற்கு ரதவீதி, நாகர்கோவில், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம்.
2. கோட்ட மேலாளர், M/s. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கோட்ட அலுவலகம், நிலா பாலன் காம்ப்ளக்ஸ், முதல் தளம், க.எண்.484/9, திருநெல்வேலி மெயின் ரோடு, கன்னியாகுமரி மாவட்டம் மூலம்.

(பாலிசி எண்.0916033120P11096041(6)

... எதிர்மனுதாரர்கள்

**MCOP. No.1480/2022**

1. பொன்னுதுரை, த/பெ. ராமசாமி, இந்து, வயது 50, வசிக்குமிடம் க.எண்.11/2B, புதூர், ஆவுடையானூர் அஞ்சல், தென்காசி தாலுகா, தென்காசி மாவட்டம்.
2. திருமதி. பொன். சாருமதி, க/பெ. பொன்னுதுரை, இந்து, வயது 48, வசிக்குமிடம் க.எண்.11/2B, புதூர், ஆவுடையானூர் அஞ்சல், தென்காசி தாலுகா, தென்காசி மாவட்டம்.
3. பொன். அரவிந்த் ஸ்ரீராம், த/பெ. பொன்னுதுரை, இந்து, வயது 19, வசிக்குமிடம் க.எண்.11/2B, புதூர், ஆவுடையானூர் அஞ்சல், தென்காசி தாலுகா, தென்காசி மாவட்டம்.

... மனுதாரர்கள்

// எதிர் //

1. T. குணசேகர், த/பெ. திரவியம், இந்து, வயது சுமார் 40, வசிக்குமிடம் க.எண்.75/10-வாகையடி தெற்கு ரதவீதி, நாகர்கோவில், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம்.
2. கோட்ட மேலாளர், M/s. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கோட்ட அலுவலகம், நிலா பாலன் காம்ப்ளக்ஸ், முதல் தளம், க.எண்.484/9, திருநெல்வேலி மெயின் ரோடு, கன்னியாகுமரி மாவட்டம் மூலம்.
   (பாலிசி எண்.0916033120P110960416)

... எதிர்மனுதாரர்கள்

**MCOP. No.1481/2022**

K. திவ்யபாலா, த/பெ. A. கருப்பையா, இந்து, வயது 23, வசிக்குமிடம் க.எண்.56-1, தெற்கு வெளிவீதி, முத்துக்கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் அஞ்சல், கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம் - 627 751.

... மனுதாரர்

// எதிர் //

1. T. குணசேகர், த/பெ. திரவியம், இந்து, வயது சுமார் 40, வசிக்குமிடம் க.எண்.75/10-வாகையடி தெற்கு ரதவீதி, நாகர்கோவில், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி

மாவட்டம்.

2. கோட்ட மேலாளர், M/s. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கோட்ட அலுவலகம், நிலா பாலன் காம்ப்ளக்ஸ், முதல் தளம், க.எண்.484/9, திருநெல்வேலி மெயின் ரோடு, கன்னியாகுமரி மாவட்டம் மூலம்.
(பாலிசி எண்.0916033120P110960416)

... எதிர்மனுதாரர்கள்

இம்மூன்று மனுக்கள் கடந்த 28.09.2022 ஆம் தேதி மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அங்கு எம்.சி.ஓ.பி.எண்கள்.1478/2022, 1480/2022 மற்றும் 1481/2022 ஆக 12.10.2022-ம் தேதி கோப்பில் எடுக்கப்பட்டு, அங்கிருந்து இந்நீதிமன்றத்திற்கு எம்.சி.ஓ.பி.எண்கள்.1478/2022, 1480/2022 மற்றும் 1481/2022 ஆக 19.10.2022-ம் தேதி விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டு, 13.11.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு. ஸ்கந்த ராஜா அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஒருதலை நிலையாக்கம் செய்யப்பட்டும், 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. I. சேவியர் ராஜரீகம் அவர்களும் முன்னிலையாகியும், மனுதாரர்கள் தரப்பில் எம்.சி.ஓ.பி.எண்கள்.1478/2022, 1480/2022 மற்றும் 1481/2022 இம்மூன்று வழக்குகளையும் ஒன்றாக விசாரித்து தீர்வளிக்க Joint Memo தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, அதன்படி இம்மூன்று வழக்குகளை பொறுத்து MCOP.No.1481/2022-இல் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு சாட்சிகளையும், சான்றாவணங்களையும் பரிசீலித்து, இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

## பொவான தீர்வம்

### MCOP.No.1478/2022

இம்மனுவானது கடந்த 04.12.2021 ஆம் தேதியன்று ஏற்பட்ட மோட்டார் வாகன

விபத்தில் மரணமடைந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி என்பவரின் வாரிசுதாரர்களான மனுதாரர்களால், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடாக ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்) கோரி 28.09.2022 ஆம் தேதியன்று, இம்மனுவானது மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 166 மற்றும் 140-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு:-</u>

1-ம் மனுதாரர் விபத்தில் இறந்து போன ப்ரீடா ஏஞ்சலின் ராணி என்பவரின் தந்தை. 2-ம் மனுதாரர் இறந்த நபரின் தாய். 3-ம் மனுதாரர் இறந்த நபரின் சகோதரர். விபத்தில் இறந்து போன ப்ரீடா ஏஞ்சலின் ராணி 23 வயது நிரம்பியவர். அவர் விபத்து சமயத்தில் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரியில் MBBS 4-ம் ஆண்டு படித்து வந்தார். கடந்த 04.12.2021-ம் தேதி காலை சுமார் 10.20 மணியளவில், விபத்தில் இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி மற்றும், அவருடன் இரண்டு நண்பர்கள் திருநெல்வேலி, மல்லிகா காலனியிலுள்ள மதுரையிலிருந்து, நாகர்கோவில் செல்லும் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையின் கீழ்பக்க பாதியில் திருநெல்வேலி வோல்ஸ்வேகன் விற்பனை மற்றும் சர்வீஸ் ஷோரூமுக்கு எதிராக ரெட்டியார்பட்டி மலை கணவாய்க்கு சற்று முன்னதாக, தன்னுடைய தோழி பொன்திவ்யா காயத்ரி ஓட்டிச் சென்ற TN-76-AK-4744 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரில் சென்ற போது, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதுமான TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலையின் சென்டர் மீடியனில் மோதி தவறான பாதையில் வந்து விபத்து மோதி விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டு ப்ரீடா ஏஞ்சலின் ராணி சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த பொன் திவ்யா காயத்ரியும் சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். மற்றொரு நண்பரான திவ்யா பாலா என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்து குறித்து திருநெல்வேலி, போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையத்தில்,

1-ம் எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநர் மீது குற்ற எண்.358/2021, இதச பிரிவுகள் 279,338 மற்றும் 304(A)-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, திருநெல்வேலி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. விபத்து சமயத்தில் இறந்து போன ப்ரீடா ஏஞ்சலின் ராணி எவ்வித நோய் நொடிகளுமின்றி நல்ல ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருந்து வந்தார். அவர் கல்வியில் சிறந்து விளக்கியிருந்தார். மனுதாரர்கள் எதிர்காலத்தில் இறந்த நபரின் வருமானத்தை எதிர்பார்த்தே வாழ்ந்து வருகின்றனர். மேற்படி விபத்தின் மூலம் 1 மற்றும் 2 மனுதாரர்கள் தங்களது மகளையும், 3-ம் மனுதாரர் தனது சகோதரியையும் இழந்து தவிக்கின்றனர். மேற்படி விபத்தின் மூலம் மனுதாரர்கள் குடும்பம் உலகத்தில் இருட்டறைக்குள் தள்ளப்பட்டுவிட்டது. மேற்படி நபரை இழந்து மனுதாரர்கள் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். மனுதாரர்கள் இறந்த நபரின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தனர். எனவே, மனுதாரர்கள் விபத்தில் ப்ரீடா ஏஞ்சலின் ராணி இறந்தது தொடர்பாக இழப்பீடாக ரூ.1,00,00,000/-மும், 12% பின்வட்டியும் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். 1-வது எதிர்மனுதாரர் TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரின் உரிமையாளர் ஆவார். மேற்படி காரானது விபத்து சமயத்தில் 2-வது எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தும், தனித்தும் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகையை செலுத்தவதற்கு கடமைப்பட்டவர்கள் ஆவர். மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

3) 2-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல, ஆரம்பத்திலேயே தள்ளுபடியாகக் கூடியது. மனுவில் விபத்தில் இறந்த நபரின் வயது. கல்வி மற்றும் அவருக்கு படிக்கும் தருவாயில் அவர் Stipen மூலமாக பெற்று வருமானம் ஆகியவை குறித்து தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள் இறந்த நபரின் சட்டப்படியான வாரிசுகள் என்பதும் மறுக்கப்படுகிறது. மேற்கூறியவற்றை மனுதாரர்களே தகுந்த ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க

வேண்டும். மனுவில் விபத்து நடந்த விதம் குறித்து தெரிவித்துள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானது. உண்மையில், மேற்படி விபத்தானது 1-வது எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை. 1-வது எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநர், மேற்படி காரில் இறந்து போன சண்முகசுந்தரம் மற்றும் பெருமாள் என்பவர்களை அமர்த்தி கொண்டு மெதுவாகவும், கவனமாகவும், சாலை விதிகளை பின்பற்றியும் தெற்கிலிருந்து, வடக்காக நாகர்கோவில் - மதுரை நான்கு வழிச்சாலையின் இடதுபுற ஓரமாக சென்று கொண்டிருந்த போது, திருநெல்வேலி வோல்ஸ்வேகான் கார் கம்பெனி அருகில், சாலையில் கிடந்த கூரிய பொருட்கள் மேற்படி காரின் முன் டயரில் ஏறி பஞ்சராகி டயர் வெடித்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் சென்டர் மீடியனில் மோதி மற்ற டயர்களும் வெடித்து கார் உருண்டு எதிர்புறம் உள்ள சாலைக்கு சென்று, அந்த சாலையில் இருந்த இரும்பு தடுப்பில் முட்டி நான்கு வழிச்சாலையில் உருண்டது. அப்போது அந்த சாலையில் TN-76-AK-4744 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரின் ஓட்டுநர் பின்னிருக்கையில் இருவரை அமர்த்தி கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வடக்கிலிருந்து, தெற்காக வந்து மேற்படி காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணித்து அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை தானே வரவழைத்து கொண்டனர்.

மேற்படி இருசக்கர வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கு முரணாக மூன்று நபர்கள் பயணித்துள்ளதால், மேற்படி இருசக்கர வாகன ஓட்டியால் காப்பீடு பாலிசி விதி மீறல் ஏற்பட்டுள்ளது. மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்னிருக்கையில் இரண்டு நபர்கள் அமர்த்து வந்ததால், மேற்படி ஓட்டுநர் சாலையின் முன்பகுதியில் ஓரமாக சிரமமாக வாகனத்தை இயக்கி, தனது கட்டுப்பாட்டை இழந்து மேற்படி விபத்தானது ஏற்பட்டது- மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணித்த நபர்கள் மூன்று பேரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. எனவே, இருசக்கர வாகனத்தில் பயணித்தவர்களால் மோட்டார் வாகன சட்ட விதி

மீறல் ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி இருசக்கர வாகன ஓட்டுநர் விபத்திற்கு கூட்டுப் பொறுப்பாளியாவார். மேலும், மனுவில் மனுதாரர்கள் பல்வேறு தலைப்பின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டு தொகையும், வட்டியும் அதிகமாகும். எனவே, 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடியாக வேண்டும்.

**4. MCOP.No.1480/2022**

இம்மனுவானது கடந்த 04.12.2021 ஆம் தேதியன்று ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் மரணமடைந்த பொன். திவ்யா காயத்ரி என்பவரின் வாரிசுதாரர்களான மனுதாரர்களால், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடாக ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்) கோரி 28.09.2022 ஆம் தேதியன்று, இம்மனுவானது மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 166 மற்றும் 140-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு:-

1-ம் மனுதாரர் விபத்தில் இறந்து போன பொன். திவ்யா காயத்ரி என்பவரின் தந்தை. 2-ம் மனுதாரர் இறந்த நபரின் தாய். 3-ம் மனுதாரர் இறந்த நபரின் சகோதரர். விபத்தில் இறந்து போன பொன். திவ்யா காயத்ரி 22 வயது நிரம்பியவர். அவர் விபத்து சமயத்தில் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரியில் MBBS 4-ம் ஆண்டு படித்து வந்தார். கடந்த 04.12.2021-ம் தேதி காலை சுமார் 10.20 மணியளவில், விபத்தில் இறந்த பொன். திவ்யா காயத்ரி, அவருடன் இரண்டு நண்பர்களுடன் திருநெல்வேலி, மல்லிகா காலனியிலுள்ள மதுரையிலிருந்து, நாகர்கோவில் செல்லும் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையின் கீழ்பக்க பாதியில் திருநெல்வேலி வோல்ஸ்வேகன் விற்பனை மற்றும் சர்வீஸ் ஷோரூமுக்கு எதிராக ரெட்டியார்பட்டி மலை கணவாய்க்கு சற்று முன்னதாக, பொன். திவ்யா காயத்ரி TN-76-AK-4744 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரை ஓட்டிச் சென்ற போது, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதுமான TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலையின் சென்டர் மீடியனில்

மோதி தவறான பாதையில் வந்து விபத்து மோதி விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டு பொன். திவ்யா காயத்ரி சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி என்பவரும் சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். மற்றொரு நண்பரான திவ்யா பாலா என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்து குறித்து திருநெல்வேலி, போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையத்தில், 1-ம் எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநர் மீது குற்ற எண்.358/2021, இதச பிரிவுகள் 279,338 மற்றும் 304(A)-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, திருநெல்வேலி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. விபத்து சமயத்தில் இறந்து போன பொன். திவ்யா காயத்ரி எவ்வித நோய் நொடிகளுமின்றி நல்ல ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருந்து வந்தார். அவர் கல்வியில் சிறந்து விளக்கியிருந்தார். மனுதாரர்கள் எதிர்காலத்தில் இறந்த நபரின் வருமானத்தை எதிர்பார்த்தே வாழ்ந்து வருகின்றனர். மேற்படி விபத்தின் மூலம் 1 மற்றும் 2 மனுதாரர்கள் தங்களது மகளையும், 3-ம் மனுதாரர் தனது சகோதரியையும் இழந்து தவிக்கின்றனர். மேற்படி விபத்தின் மூலம் மனுதாரர்கள் குடும்பம் உலகத்தில் இருட்டறைக்குள் தள்ளப்பட்டுவிட்டது. மேற்படி நபரை இழந்து மனுதாரர்கள் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். மனுதாரர்கள் இறந்த நபரின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தனர். எனவே, மனுதாரர்கள் விபத்தில் பொன். திவ்யா காயத்ரி இறந்தது தொடர்பாக இழப்பீடாக ரூ.1,00,00,000/-மும், 12% பின்வட்டியும் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். 1-வது எதிர்மனுதாரர் TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரின் உரிமையாளர் ஆவார். மேற்படி காரானது விபத்து சமயத்தில் 2-வது எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தும், தனித்தும் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகையை செலுத்தவதற்கு கடமைப்பட்டவர்கள் ஆவர். மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

6) 2-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல, ஆரம்பத்திலேயே தள்ளுபடியாகக் கூடியது. மனுவில் விபத்தில் இறந்த நபரின் வயது. கல்வி மற்றும் அவருக்கு படிக்கும் தருவாயில் அவர் Stipen மூலமாக பெற்று வருமானம் ஆகியவை குறித்து தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள் இறந்த நபரின் சட்டப்படியான வாரிசுகள் என்பதும் மறுக்கப்படுகிறது. மேற்கூறியவற்றை மனுதாரர்களே தகுந்த ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும். மனுவில் விபத்து நடந்த விதம் குறித்து தெரிவித்துள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானது. உண்மையில், மேற்படி விபத்தானது 1-வது எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை. 1-வது எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநர், மேற்படி காரில் இறந்து போன சண்முகசுந்தரம் மற்றும் பெருமாள் என்பவர்களை அமர்த்தி கொண்டு மெதுவாகவும், கவனமாகவும், சாலை விதிகளை பின்பற்றியும் தெற்கிலிருந்து, வடக்காக நாகர்கோவில் - மதுரை நான்கு வழிச்சாலையின் இடதுபுற ஓரமாக சென்று கொண்டிருந்த போது, திருநெல்வேலி வோல்ஸ்வேகான் கார் கம்பெனி அருகில், சாலையில் கிடந்த கூரிய பொருட்கள் மேற்படி காரின் முன் டயரில் ஏறி பஞ்சராகி டயர் வெடித்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் சென்டர் மீடியனில் மோதி மற்ற டயர்களும் வெடித்து கார் உருண்டு எதிர்புறம் உள்ள சாலைக்கு சென்று, அந்த சாலையில் இருந்த இரும்பு தடுப்பில் முட்டி நான்கு வழிச்சாலையில் உருண்டது. அப்போது அந்த சாலையில் TN-76-AK-4744 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரின் ஓட்டுநர் பின்னிருக்கையில் இருவரை அமர்த்தி கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வடக்கிலிருந்து, தெற்காக வந்து மேற்படி காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணித்து அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை தானே வரவழைத்து கொண்டனர்.

மேற்படி இருசக்கர வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின்

எண்ணிக்கைக்கு முரணாக மூன்று நபர்கள் பயணித்துள்ளதால், மேற்படி இருசக்கர வாகன ஓட்டியால் காப்பீடு பாலிசி விதி மீறல் ஏற்பட்டுள்ளது. மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்னிருக்கையில் இரண்டு நபர்கள் அமர்த்து வந்ததால், மேற்படி ஓட்டுநர் சாலையின் முன்பகுதியில் ஓரமாக சிரமமாக வாகனத்தை இயக்கி, தனது கட்டுப்பாட்டை இழந்து மேற்படி விபத்தானது ஏற்பட்டது. மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணித்த நபர்கள் மூன்று பேரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. எனவே, இருசக்கர வாகனத்தில் பயணித்தவர்களால் மோட்டார் வாகன சட்ட விதி மீறல் ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி இருசக்கர வாகன ஓட்டுநர் விபத்திற்கு கூட்டுப் பொறுப்பாளியாவார். மேலும், மனுவில் மனுதாரர்கள் பல்வேறு தலைப்பின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டு தொகையும், வட்டியும் அதிகமாகும். எனவே, 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடியாக வேண்டும்.

**7. MCOP.No.1481/2022**

இம்மனுவானது கடந்த 04.12.2021 ஆம் தேதியன்று ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் காயமடைந்த மனுதாரரால், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடாக ரூ.36,00,000/-(ரூபாய் முப்பத்தாறு இலட்சம் மட்டும்) கோரி 29.09.2022 ஆம் தேதியன்று, இம்மனுவானது மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 166 மற்றும் 140-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு:-

விபத்தில் காயமடைந்த மனுதாரர் திவ்யபாலா விபத்து சமயத்தில் 23 வயது நிரம்பியவர். அவர் விபத்து சமயத்தில் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரியில் MBBS 4-ம் ஆண்டு படித்து வந்தும், டிரைனராகவும் பணி செய்து வந்து மாதம் ரூ.25,750/- வருமானம் ஈட்டி வந்தார். கடந்த 04.12.2021-ம் தேதி காலை சுமார் 10.20 மணியளவில், விபத்தில் காயமடைந்த திவ்யபாலா தனது நண்பர் இருவருடன் திருநெல்வேலி, மல்லிகா காலனியிலுள்ள மதுரையிலிருந்து, நாகர்கோவில் செல்லும் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையின் கீழ்பக்க பாதியில் திருநெல்வேலி வோல்ஸ்வேகன் விற்பனை மற்றும் சர்வீஸ் ஷோரூமுக்கு எதிராக ரெட்டியார்பட்டி மலை கணவாய்க்கு

சற்று முன்னதாக, தனது நண்பர் பொன். திவ்யா காயத்ரி என்பவர் TN-76-AK-4744 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரை ஓட்டியும், பின்னிருக்கையில் தனது நண்பருடன் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்த போது, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதுமான TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலையின் சென்டர் மீடியனில் மோதி தவறான பாதையில் வந்து விபத்து மோதி விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தில் மனுதாரருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்து குறித்து திருநெல்வேலி, போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையத்தில், 1-ம் எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநர் மீது குற்ற எண்.358/2021, இதச பிரிவுகள் 279,338 மற்றும் 304(A)-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, திருநெல்வேலி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. விபத்து சமயத்தில் காயமடைந்த மனுதாரர் எவ்வித நோய் நொடிகளுமின்றி நல்ல ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருந்து வந்தார். அவர் கல்வியில் சிறந்து விளக்கியிருந்தார். அவருக்கு ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக அவருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக இழப்பீடாக ரூ.36,00,000/-மும், 9% பின்வட்டியும் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். 1-வது எதிர்மனுதாரர் TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரின் உரிமையாளர் ஆவார். மேற்படி காரானது விபத்து சமயத்தில் 2-வது எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தும், தனித்தும் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையை செலுத்தவதற்கு கடமைப்பட்டவர்கள் ஆவர். மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

9) <u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல, ஆரம்பத்திலேயே தள்ளுபடியாகக் கூடியது. மனுவில் விபத்தில் காயமடைந்த

மனுதாரரின் வயது. கல்வி மற்றும் அவருக்கு படிக்கும் தருவாயில் அவர் பெற்ற வருமானம் ஆகியவை குறித்து தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவில் விபத்து நடந்த விதம் குறித்து தெரிவித்துள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானது. உண்மையில், மேற்படி விபத்தானது 1-வது எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை. 1-வது எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநர், மேற்படி காரில் இறந்து போன சண்முகசுந்தரம் மற்றும் பெருமாள் என்பவர்களை அமர்த்தி கொண்டு மெதுவாகவும், கவனமாகவும், சாலை விதிகளை பின்பற்றியும் தெற்கிலிருந்து, வடக்காக நாகர்கோவில் - மதுரை நான்கு வழிச்சாலையின் இடதுபுற ஓரமாக சென்று கொண்டிருந்த போது, திருநெல்வேலி வோல்ஸ்வேகான் கார் கம்பெனி அருகில், சாலையில் கிடந்த கூரிய பொருட்கள் மேற்படி காரின் முன் டயரில் ஏறி பஞ்சராகி டயர் வெடித்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் சென்டர் மீடியனில் மோதி மற்ற டயர்களும் வெடித்து கார் உருண்டு எதிர்புறம் உள்ள சாலைக்கு சென்று, அந்த சாலையில் இருந்த இரும்பு தடுப்பில் முட்டி நான்கு வழிச்சாலையில் உருண்டது. அப்போது அந்த சாலையில் TN-76-AK-4744 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரின் ஓட்டுநர் பின்னிருக்கையில் இருவரை அமர்த்தி கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வடக்கிலிருந்து, தெற்காக வந்து மேற்படி காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணித்து அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை தானே வரவழைத்து கொண்டனர்.

மேற்படி இருசக்கர வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கு முரணாக மூன்று நபர்கள் பயணித்துள்ளதால், மேற்படி இருசக்கர வாகன ஓட்டியால் காப்பீடு பாலிசி விதி மீறல் ஏற்பட்டுள்ளது. மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்னிருக்கையில் இரண்டு நபர்கள் அமர்த்து வந்ததால், மேற்படி ஓட்டுநர் சாலையின் முன்பகுதியில் ஓரமாக சிரமமாக வாகனத்தை இயக்கி, தனது கட்டுப்பாட்டை இழந்து மேற்படி விபத்தானது ஏற்பட்டது. மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணித்த நபர்கள் மூன்று பேரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை.

எனவே, இருசக்கர வாகனத்தில் பயணித்தவர்களால் மோட்டார் வாகன சட்ட விதி மீறல் ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி இருசக்கர வாகன ஓட்டுநர் விபத்திற்கு கூட்டுப் பொறுப்பாளியாவார். மேலும், மனுவில் மனுதாரர் பல்வேறு தலைப்பின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டு தொகையும், வட்டியும் அதிகமாகும். எனவே, 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடியாக வேண்டும்.

10) இம்மூன்று மனுக்கள் தொடர்பாக எம்.சி.ஓபி.எண்.1481/2022-ல் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் எம்.சி.ஓபி.எண்.1481/2022-ன் மனுதாரர் ம.சா.1 ஆகவும், எம்.சி.ஓபி.எண்.1478/2022-ன் 2-ம் மனுதாரர் ம.சா.2 ஆகவும், எம்.சி.ஓபி.எண்.1480/2022-ன் 1-ம் மனுதாரர் ம.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.40 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**11) இம்மூன்று மனுக்களில் தீர்வு காணவேண்டிய பிரச்சனைகள்**

(1) இந்த விபத்து யாருடைய கவனக் குறைவால் நடந்தது?

(2) மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க இழப்பீடு எவ்வளவு? அதை எந்த எதிர்மனுதாரர் செலுத்தக் கடமைப்பட்டவர் ?

12) பிரச்சினை எண்.1

எம்.சி.ஓபி.எண்.1481/2022 மனுவின் மனுதாரர் தன்னை ம..சா.1 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். அவர் தனது மனுவிலும், முதல் விசாரணை நிரூபண பிரமான வாக்குமூலத்திலும், கடந்த 04.12.2021-ம் தேதி காலை சுமார் 10.20 மணியளவில், விபத்தில் காயமடைந்த நபர், இரண்டு நண்பர்களுடன் திருநெல்வேலி, மல்லிகா காலனியிலுள்ள மதுரையிலிருந்து, நாகர்கோவில் செல்லும் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையின் கீழ்பக்க பாதியில் திருநெல்வேலி வோல்ஸ்வேகன் விற்பனை மற்றும் சர்வீஸ் ஷோரூமுக்கு எதிராக ரெட்டியார்பட்டி மலை கணவாய்க்கு சற்று முன்னதாக, தன்னுடைய தோழி பொன்திவ்யா காயத்ரி என்பவர் TN-76-AK-4744

என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரை ஓட்ட தானும், தன்னுடைய நண்பர் ஒருவருடன் பின்னிருக்கையில் அமர்ந்து பயணம் செய்த போது, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதுமான TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலையின் சென்டர் மீடியனில் மோதி தவறான பாதையில் வந்து விபத்து மோதி விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தில் மனுதாரருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த இரண்டு நபர்கள் சம்பவயிடத்திலேயே இறந்த விட்டனர் என்றும் முன்னுரைக்கப்பட்டுள்ளது குறித்து மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

13. மேலும், எம்.சி.ஓபி.எண்.1478/2022 மனுவின் 2-ம் மனுதாரர் தன்னை ம.சா.2 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். அவர் தனது மனுவிலும், முதல் விசாரணை நிரூபண பிரமான வாக்குமூலத்திலும், கடந்த 04.12.2021-ம் தேதி காலை சுமார் 10.20 மணியளவில், விபத்தில் இறந்த தனது மகள் ப்ரீடா ஏஞ்சலின் ராணி, இரண்டு நண்பர்களுடன் திருநெல்வேலி, மல்லிகா காலனியிலுள்ள மதுரையிலிருந்து, நாகர்கோவில் செல்லும் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையின் கீழ்பக்க பாதியில் திருநெல்வேலி வோல்ஸ்வேகன் விற்பனை மற்றும் சர்வீஸ் ஷோரூமுக்கு எதிராக ரெட்டியார்பட்டி மலை கணவாய்க்கு சற்று முன்னதாக, தன்னுடைய தோழி பொன்திவ்யா காயத்ரி என்பவர் TN-76-AK-4744 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரை ஓட்ட, பின்னிருக்கையில் தனது நண்பர் ஒருவருடன் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்த போது, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதுமான TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலையின் சென்டர் மீடியனில் மோதி தவறான பாதையில் வந்து விபத்து மோதி விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டு ப்ரீடா ஏஞ்சலின் ராணி சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார்

என்றும், மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த பொன் திவ்யா காயத்ரி சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார் என்றும், மற்றொரு நண்பரான திவ்யபாலா என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது என்றும் முன்னுரைக்கப் பட்டுள்ளது குறித்து மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

14. மேலும், எம்.சி.ஓபி.எண்.1480/2022 மனுவின் 1-ம் மனுதாரர் தன்னை ம.சா.3 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். அவர் தனது மனுவிலும், முதல் விசாரணை நிரூபண பிரமான வாக்குமூலத்திலும், கடந்த 04.12.2021-ம் தேதி காலை சுமார் 10.20 மணியளவில், விபத்தில் இறந்த தனது மகள் பொன் திவ்யா காயத்ரி, இரண்டு நண்பர்களுடன் திருநெல்வேலி, மல்லிகா காலனியிலுள்ள மதுரையிலிருந்து, நாகர்கோவில் செல்லும் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையின் கீழ்பக்க பாதியில் திருநெல்வேலி வோல்ஸ்வேகன் விற்பனை மற்றும் சர்வீஸ் ஷோரூமுக்கு எதிராக ரெட்டியார்பட்டி மலை கணவாய்க்கு சற்று முன்னதாக TN-76-AK-4744 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரை ஓட்ட, பின்னிருக்கையில் இரண்டு நண்பர்களை அமர்த்தி கொண்டு ஓட்டிச் சென்று கொண்டிருந்த போது, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதுமான TN-74-AL-3993 என்ற எண் கொண்ட மஹேந்திரா XUV 500 காரை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலையின் சென்டர் மீடியனில் மோதி தவறான பாதையில் வந்து விபத்து மோதி விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டு பொன் திவ்யா காயத்ரி சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார் என்றும், மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார் என்றும், மற்றொரு நண்பரான திவ்யபாலா என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது என்றும் முன்னுரைக்கப்பட்டுள்ளது குறித்து மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

15. அது வகைக்கு ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை கவனமாக பரிசீலிக்கையில், விபத்திற்கு காரணம் மற்றும் பொறுப்பாளி என திருநெல்வேலி

மாநகர போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.358/2021, இதச பிரிவுகள் 279,338 மற்றும் 304(A)-ன் கீழ் வழக்கிடப்பட்டுள்ளதில், திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் திரு. K. சாந்தாராமன் அவர்கள் கொடுத்த புகார் மனுவில்,

"இன்று 04.12.2021 காலை 10.30 மணியளவில் எனக்கு மருத்துவர் கிருஷ்ண லீலா, உதவி இயக்குநர், சுகாதார பணிகள் அவர்களிடம் இருந்து எனது கைப்பேசிக்கு அழைப்பு வந்தது. அதில் திருநெல்வேலி நான்கு வழிச்சாலையில் வோல்க்ஸ்வேகன் கார் கம்பெனி எதிர்புறமாக உள்ள மதுரை கன்னியாகுமரி சாலையில் மருத்துவக்கல்லூரியை சேர்ந்த மூன்று மாணவிகள் ஒரு விபத்தில் சிக்கியுள்ளார்கள் என்ற தகவலை கூறினார்கள். நான் இந்த தகவல் தெரிந்தவுடன் எங்கள் கல்லூரி முதல்வருக்கு என்னுடைய அழைபேசி மூலமாக தகவல் கூறிவிட்டு உடனடியாக சம்பவயிடத்திற்கு விரைந்து சென்றேன். அங்கு சென்று சம்பவயிடத்தை பார்த்த போது, மேற்குறிப்பிட்ட கார் கம்பெனி எதிர்புறமாக கன்னியாகுமரி செல்கின்ற சாலையில் ஒரு TN-74-AL-3993 மகேந்திரா கார் தலைகீழாக கிடந்தது. அதன் அருகில் முன்பக்கம் மிகவும் சேதம் அடைந்த நிலையில் TN-76-AK-4744 பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனம் கீழே கிடந்தது. அதன் அருகில் இரண்டு மருத்துவ மாணவிகள் இறந்த நிலையிலும், காயம்பட்ட மாணவியும் ரோட்டில் கிடந்தனர். அருகில் நின்று கொண்டிருந்தவர்கள் விசாரித்த போது, அவர்கள் மூவரும் சம்பவயிடத்திற்கு எதிரே உள்ள வோல்க்ஸ்வேகன் கார் கம்பெனியில் வேலை பார்ப்பதாகவும், அவர்களுடைய பெயர் உதயகார்த்திக், சிவா, தினேஷ் என்றும் கூறினார்கள். நான் அவர்களை விசாரித்த போது இன்று 04.12.2021-ம் தேதி காலை 10.20 மணிக்கு நாகர்கோவில் இருந்து திருநெல்வேியை நோக்கி மிக வேகமாக வந்து கொண்டிருந்த TN-74-AL-3993 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா கார் இருவழிச் சாலைகளின் நடுப்பக்க தடுப்பில் மோதி, மேற்படி கார் சுழன்று பறந்த வேகத்தில் மூன்று முறை உருண்டு எதிர்புறம் உள்ள சாலைக்கு சென்று, அந்த சாலையில் இருந்த இரும்பு தடுப்பில் முட்டி, அதன் பின்பு தெற்கு நோக்கி இருசக்கர

வாகனத்தில் வந்து கொண்டிருந்த மூன்று மருத்துவகல்லூரி மாணவிகள் இடது பக்க ஓரமாக வந்த TN-76-AK-4744 என்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி பலத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், அவர்கள் பேச்சு, மூச்சு இன்றி கிடந்தார்கள் என்று என்னிடம் கூறினார்கள். நான் அங்கிருந்து முதல்வருக்கு தகவல் தெரிவித்தேன். பின்னர் அடிபட்டு கிடந்த மாணவிகள் மூன்று பேரையும் அருகில் சென்று பார்த்த போது, அதில் பொன். திவ்ய காயத்ரி வயது 21 மற்றும் பிரீடா ஏஞ்சலின் வயது 21 இருவரும் தலையில் பலத்த காயத்துடன் சம்பவயிடத்தில் இறந்த நிலையில் கிடந்தனர். மற்றொரு மாணவியான திவ்யபாலா தலையில் பலத்த காயத்துடன் சுயநினைவு இன்றி ரோட்டில் கிடந்தவரை அருகில் தகவல் தெரிந்து வந்த 108 ஆம்புலன்ஸ் மூலமாக மேற்படி மாணவி திவ்யபாலாவையும், இறந்து போன மாணவிகளையும் ஆம்புலன்ஸ் மூலமாக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்".

எனக் குறிப்பிடப்பட்டு, 1-ம் எதிர்மனுதாரரின் TN-74-AL-3993 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா காரின் ஓட்டுநர் சுசீந்தரம் தாணுப்பிள்ளை மகன் சந்தோஷ் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேற்படி தன் மீதான முதல் தகவல் அறிக்கையை மறுத்து, அதை ரத்து செய்யக் கோரி 1-ம் எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுனர் சந்தோஷ் காவல் உயர் அதிகாரிகளுக்கோ, நீதிமன்றத்திலோ ஆட்சேபணை மனு செய்து, அதன் மீதான நடவடிக்கையை தடுத்து நிறுத்தவில்லை.

16) மேலும், 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரையில், விபத்து சமயத்தில் மேற்படி இருசக்கர வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கு கூடுதலாக மூன்று நபர்கள் பயணம் செய்துள்ளனர் என்றும், மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த நபர்கள் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது வகைக்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

17. எனவே, மேற்படி இருதரப்பு வாதங்கள், சாட்சியங்கள் மற்றும்

Relle

சான்றாவணங்களை பரிசீலனை செய்த வகையில், TN-74-AL-3993 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா காரின் ஓட்டுநர் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, TN-76-AK-4744 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிய பொன்திவ்யா காயத்ரியும், பின்னிருக்கையில் பயணம் செய்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி என்பவரும் சம்பவயிடத்திலேயே இறந்தும், திவ்யபாலா என்பவருக்கு பலத்த காயம் ஏற்படுத்தியுள்ளதும் தெரிய வருகிறது. மேலும், மேற்படி இருசக்கர வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கு கூடுதலாக மூன்று நபர்கள் பயணம் செய்துள்ளதும் தெரிய வருகிறது. எனவே, மேற்படி விபத்திற்கு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் காரை ஓட்டி விபத்தை ஏற்படுத்திய 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் 90 விழுக்காடும், அனுமதிக்கப்பட்ட பயணிகள் எண்ணிக்கைக்கு மேலாக மூன்று நபர்கள் பயணம் செய்ததால் இருசக்கர வாகன ஓட்டுநர் 10 விழுக்காடும் கூட்டுப் பொறுப்பாளிகள் என பிரச்சனை எண்.1-க்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

18. **<u>பிரச்சனை எண்.2-க்கான தீர்வு</u>**:

**<u>MCOP.No.1478/2022</u>**

Smt.Sarla Verma and others /Vs/ Delhi Transport Corporation & another cited in 2009 (2) TAC 677 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவின் அடிப்படையில், மோட்டார் வாகன விபத்தில் ஒரு நபர் இறந்தமைக்கான இழப்பீடு வழங்கும் போது மூன்று முக்கிய விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். அவை (1) இறந்த நபரின் வயது, (2) இறந்த நபரின் வருமானம் மற்றும் (3) இறந்த நபரைச் சார்ந்திருக்கும் நபர்கள். மேலும், இறந்த நபரை சார்ந்திருந்தவர்களின் சார்பு இழப்பு பொறுத்து முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால், (1) வருமானம் பொறுத்து சேர்க்கவேண்டிய / கழிக்க வேண்டிய தொகை, (2) இறந்த நபரின் சுயதேவைக்காக கழிக்கவேண்டிய தொகை மற்றும் (3) இறந்த நபரின் வயதிற்குரிய பெருக்கீட்டு எண் ஆகியவை ஆகும்.

19. மேலும், மனுவிலும், ம.சா.2-ன் நிரூபண பிரமாண வாக்குமூலத்திலும், விபத்தில் இறந்து போன ப்ரீடா ஏஞ்சலின் ராணி விபத்து சமயத்தில் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் 4-ம் வருட MBBS படிப்பு படித்து வந்தார் என்றும், அவர் விபத்தில் இறந்திருக்காவிட்டால் 2022 ஏப்ரல் மாதத்தில் House Surgeon படிப்பில் சேர்ந்த மாதம் ரூ.35,000/- உதவி தொகை கிடைத்திருக்கும் என்றும், மேலும், அடுத்த வருடத்தில் MBBS படிப்பை முடித்தவுடன் மாதம் ரூ.70,000/- சம்பளமாக பெற்றிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது வகைக்கு, மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.25 ஆவணத்தை கவனமாக பரிசீலிக்கையில், மேற்படி விபத்தில் இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி 2017- 2018 ஆம் ஆண்டு நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் MBBS சேர்ந்துள்ளது தெரிய வருகிறது. எனவே, விபத்தில் இறந்து போன ப்ரீடா ஏஞ்சலின் ராணி திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் MBBS 4-ம் வருடம் படித்து வந்துள்ளது தெரிய வருகிறது. எனவே, விபத்தில் இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி MBBS முடித்து எதிர்காலத்தில் குறைந்த பட்சம் ரூ.35,000/-க்கு மேல் வருமானம் ஈட்டியிருப்பார் என கருதி, மேற்படி விபத்தில் இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் எதிர்கால உத்தேச வருமானமானது ரூ.35,000/- என இழப்பீடு கணக்கீட்டிற்காக உத்தேச வருமானமானது கணக்கிடப்படுகிறது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

20. மேலும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் ம.சா.ஆ.18 வாரிசு சான்றிலிருந்து மனுதாரர்கள், இறந்து போன ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் என்பது தெரிய வருவதால், விபத்தில் ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் இறந்தமைக்கான இழப்பீடு தொகையினை பெற மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

21. ஆகவே, விபத்தில் இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் மாத வருமானம் ரூ.35,000/- என முடிவு செய்துள்ளதின் அடிப்படையில், அவரின் வயது 23 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ம.சா.ஆ.16 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் பிரேத பரிசோதனை அறிக்கையில், அவரின் வயது

23 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் வயது 23 என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து, அவருக்கு பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் எதிர்கால கூடுதல் வருமானம் 40 சதவீதம் கிடைக்கும் என்பதாலும், அதன்படி பார்க்கும் போது ரூ.35,000/- x 40% = ரூ.14,000/- என்பதால், இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் எதிர்கால மாத வருமானம் ரூ.35,000/- + ரூ.14,000/- = ரூ.49,000/- என்று கணக்கிடப்படுகிறது. அதில் விபத்தில் இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி அவரது சொந்த செலவினங்களுக்காக அவருடைய வருமானத்தில் 1/3 கழிக்கப்படவேண்டும் என்பதால் ரூ.16,333/-ஐ கழித்தது போக மீதமுள்ள ரூ.32,667/- மாத வருமானத்தை வருட வருமானமாக கணக்கிடும் போது ரூ.32,667 x 12 = ரூ.3,92,004/- என்பது இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் வருடவருமானமாக கணக்கிடப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. விபத்தில் இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணியின் 23 வயது நிரம்பிய நபர் என தீர்மானித்துள்ளதின் அடிப்படையில், அவருடைய எதிர்கால வருமான பெருக்குத்திறன் எண்.18 என்பதால், மனுதாரர்களுக்கு ரூ.3,92,004/- x 18 = ரூ.70,56,072/- விபத்தில் ப்ரீடா ஏஞ்சலின் ராணி இறந்தமைக்கான வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

22) மேலும், இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி Loss of Estate பொறுத்ததான செலவினமாக ரூ.10,000/-மும், இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி இறுதி சடங்கிற்காக ரூ.15,000/-மும், இறந்த ப்ரீடா ஏஞ்சலின் ராணி மருத்துவமனைக்கு கொண்டு வந்தது மற்றும் பிரேத பரிசோதனைக்கு பிறகு நல்லடக்கம் செய்ய கொண்டு சென்றதற்கான போக்குவரத்து செலவாக ரூ.10,000/-மும் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. ஆக, பின்வரும் தலைப்பின் கீழ் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

| வரிசை எண் | தலைப்பு | தொகை |
|---|---|---|
| 1 | வருமான இழப்பு | ரூ. 70,56,072/- |
| 2 | சொத்து இழப்பு | ரூ. 10,000/- |

[order is corrected as per this court office Note No. 20/2024 dated: 21.11.24]

| | | |
|---|---|---|
| 3 | இறுதி சடங்கு | ரூ. 15,000/- |
| 4 | போக்குவரத்து செலவு | ரூ. 10,000/- |
| | மொத்த இழப்பீட்டு தொகை | **ரூ.70,91,072/-** |

23. மேற்படி விபத்திற்கு இறந்த நபர் 10 விழுக்காடும், 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் 90 விழுக்காடும் கூட்டுப் பொறுப்பாளிகள் என பிரச்சனை 1-ல் தீர்வு காணப்பட்டுள்ளதின் அடிப்படையில், மேற்படி, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரின் காப்பீடுதாரர் என்ற முறையில் 2-ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே, மொத்த இழப்பீடு தொகை **ரூ.70,91,072/-** இல் இறந்த நபரின் பங்களிப்பிற்காக 10 விழுக்காடு தொகை ரூ.7,09,107/- கழித்தது போக, 1-ம் எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநரின் பங்களிப்பிற்காக 90 விழுக்காடு தொகை **ரூ.63,81,965/-ஐ** மனுதாரர்களுக்கு, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ வழங்க உத்தரவிடப்படுகிறது. அவ்வாறே பிரச்சனை எண். 2-க்கு தீர்வு காணப்படுகிறது.

**24) <u>MCOP.No.1480/2022</u>**

Smt.Sarla Verma and others /Vs/ Delhi Transport Corporation & another cited in 2009 (2) TAC 677 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவின் அடிப்படையில், மோட்டார் வாகன விபத்தில் ஒரு நபர் இறந்தமைக்கான இழப்பீடு வழங்கும் போது மூன்று முக்கிய விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். அவை (1) இறந்த நபரின் வயது, (2) இறந்த நபரின் வருமானம் மற்றும் (3) இறந்த நபரைச் சார்ந்திருக்கும் நபர்கள். மேலும், இறந்த நபரை சார்ந்திருந்தவர்களின் சார்பு இழப்பு பொறுத்து முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால், (1) வருமானம் பொறுத்து சேர்க்கவேண்டிய / கழிக்க வேண்டிய தொகை, (2) இறந்த நபரின் சுயதேவைக்காக கழிக்கவேண்டிய தொகை மற்றும் (3) இறந்த நபரின் வயதிற்குரிய பெருக்கீட்டு எண் ஆகியவை ஆகும்.

[Order is corrected as per this court office note No:20/2024 dt. 21.11.24

25. மேலும், மனுவிலும், ம.சா.3-ன் நிரூபண பிரமாண வாக்குமூலத்திலும், விபத்தில் இறந்து போன பொன். திவ்யா காயத்ரி விபத்து சமயத்தில் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் 4-ம் வருட MBBS படிப்பு படித்து வந்தார் என்றும், அவர் விபத்தில் இறந்திருக்காவிட்டால் 2022 ஏப்ரல் மாதத்தில் House Surgeon படிப்பில் சேர்ந்த மாதம் ரூ.35,000/- உதவி தொகை கிடைத்திருக்கும் என்றும், மேலும், அடுத்த வருடத்தில் MBBS படிப்பை முடித்தவுடன் மாதம் ரூ.70,000/- சம்பளமாக பெற்றிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது வகைக்கு, மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.33 ஆவணத்தை கவனமாக பரிசீலிக்கையில், மேற்படி விபத்தில் இறந்த பொன். திவ்யா காயத்ரி 2017- 2018 ஆம் ஆண்டு நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் MBBS சேர்ந்துள்ளது தெரிய வருகிறது. எனவே, விபத்தில் இறந்து போன பொன். திவ்யா காயத்ரி திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் MBBS 4-ம் வருடம் படித்து வந்துள்ளது தெரிய வருகிறது. எனவே, விபத்தில் இறந்த பொன். திவ்யா காயத்ரி MBBS முடித்து எதிர்காலத்தில் குறைந்த பட்சம் ரூ.35,000/-க்கு மேல் வருமானம் ஈட்டியிருப்பார் என கருதி, மேற்படி விபத்தில் இறந்த பொன். திவ்யா காயத்ரியின் எதிர்கால உத்தேச வருமானமானது ரூ.35,000/- என இழப்பீடு கணக்கீட்டிற்காக உத்தேச வருமானமானது கணக்கிடப்படுகிறது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

26. மேலும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் ம.சா.ஆ.27 வாரிசு சான்றிலிருந்து மனுதாரர்கள், இறந்து போன பொன். திவ்யா காயத்ரி என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் என்பது தெரிய வருவதால், விபத்தில் பொன். திவ்யா காயத்ரி இறந்தமைக்கான இழப்பீடு தொகையினை பெற மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

27. ஆகவே, விபத்தில் இறந்த பொன். திவ்யா காயத்ரியின் மாத வருமானம் ரூ.35,000/- என முடிவு செய்துள்ளதின் அடிப்படையில், அவரின் வயது 22 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ம.சா.ஆ.26 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள இறந்த பொன். திவ்யா காயத்ரியின் பிரேத பரிசோதனை அறிக்கையில், அவரின் வயது

21 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், மனுவிலே மனுதாரர்கள் விபத்தில் இறந்த பொன். திவ்யா காயத்ரியின் வயது 22 எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே, இறந்த பொன். திவ்யா காயத்ரி வயது 22 என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து, அவருக்கு பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் எதிர்கால கூடுதல் வருமானம் 40 சதவீதம் கிடைக்கும் என்பதாலும், அதன்படி பார்க்கும் போது ரூ.35,000/- x 40% = ரூ.14,000/- என்பதால், இறந்த பொன். திவ்யா காயத்ரியின் எதிர்கால மாத வருமானம் ரூ.35,000/- + ரூ.14,000/- = ரூ.49,000/- என்று கணக்கிடப்படுகிறது. அதில் விபத்தில் இறந்த பொன். திவ்யா காயத்ரி அவரது சொந்த செலவீனங்களுக்காக அவருடைய வருமானத்தில் 1/3 [50%] கழிக்கப்படவேண்டும் என்பதால் ரூ.16,333/- [24,500/-] -ஐ கழித்தது போக மீதமுள்ள ரூ.32,667/- [24,500/-] மாத வருமானத்தை வருட வருமானமாக கணக்கிடும் போது ரூ.32,667 [24,500/-] x 12 = ரூ.3,92,004/- [2,94,000/-] என்பது இறந்த பொன். திவ்யா காயத்ரியின் வருடவருமானமாக கணக்கிடப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. விபத்தில் இறந்த பொன். திவ்யா காயத்ரி 22 வயது நிரம்பிய நபர் என தீர்மானித்துள்ளதின் அடிப்படையில், அவருடைய எதிர்கால வருமான பெருக்குத்திறன் எண்.18 என்பதால், மனுதாரர்களுக்கு ரூ.3,92,004/- [2,94,000/-] x 18 = ரூ.70,56,072/- [52,92,000/-] விபத்தில் பொன். திவ்யா காயத்ரி இறந்தமைக்கான வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

28) மேலும், இறந்த பொன். திவ்யா காயத்ரி Loss of Estate பொறுத்ததான செலவினமாக ரூ.10,000/-மும், இறந்த பொன். திவ்யா காயத்ரி இறுதி சடங்கிற்காக ரூ.15,000/-மும், இறந்த பொன். திவ்யா காயத்ரி மருத்துவமனைக்கு கொண்டு வந்தது மற்றும் பிரேத பரிசோதனைக்கு பிறகு நல்லடக்கம் செய்ய கொண்டு சென்றதற்கான போக்குவரத்து செலவாக ரூ.10,000/-மும் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. ஆக, பின்வரும் தலைப்பின் கீழ் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

| வரிசை எண் | தலைப்பு | தொகை |
|---|---|---|
| 1 | வருமான இழப்பு | ரூ. 70,56,072/- [52,92,000/-] |

* அவர் கல்லூரி மாணவி, திருமணம் ஆகாதவர் என்பதால் *
[order is corrected as per this court office note No. 20/2024, dt. 21.11.24]
III ADJ

| | | |
|---|---|---|
| 2 | சொத்து இழப்பு | ரூ. 10,000/- |
| 3 | இறுதி சடங்கு | ரூ. 15,000/- |
| 4 | போக்குவரத்து செலவு | ரூ. 10,000/- |
| | மொத்த இழப்பீட்டு தொகை | **ரூ.70,91,072/-** |

29. மேற்படி விபத்திற்கு இறந்த நபர் 10 விழுக்காடும், 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் 90 விழுக்காடும் கூட்டுப் பொறுப்பாளிகள் என பிரச்சனை 1-ல் தீர்வு காணப்பட்டுள்ளதின் அடிப்படையில், மேற்படி, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரின் காப்பீடுதாரர் என்ற முறையில் 2-ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே, மொத்த இழப்பீடு தொகை **ரூ.70,91,072/-** இல் இறந்த நபரின் பங்களிப்பிற்காக 10 விழுக்காடு தொகை ரூ.7,09,107/- கழித்தது போக, 1-ம் எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநரின் பங்களிப்பிற்காக 90 விழுக்காடு தொகை **ரூ.63,81,965/-ஐ** மனுதாரர்களுக்கு, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ வழங்க உத்தரவிடப்படுகிறது. அவ்வாறே பிரச்சனை எண். 2-க்கு தீர்வு காணப்படுகிறது.

30. **MCOP.No.1481/2022**

மனுவிலும், ம.சா.1-ன் நிரூபண பிரமாண வாக்குமூலத்திலும், மேற்படி விபத்தில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டு, அதன் விளைவாக கபாலத்திலும், மூளையிலும் ரத்தக்கசிவு ஏற்பட்டது. கழுத்தில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக தண்டுவடத்தில் C1 C2 ஆகிய இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது. நெஞ்சுக்கூட்டின் 7-வது விலா எலும்பிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது. உள்ளாங்களின் காரணமாக என் சிறுநீரகங்கள், வயிறு மற்றும் மார்பு பகுதிகளின் உள்ளே ரத்தக்கசிவு ஏற்பட்டது. நான் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். என் காயங்கள் காரணமாக எனக்கு மூச்சு விட சிரமம் ஏற்பட்டதால், தொண்டையில் துளையிட்டு செயற்கை சுவாசம் தரப்பட்டது. எனக்கு தண்டு வடத்திலும், விலா எலும்பிலும் ஏற்பட்ட எலும்பு முறிவை அறுவை சிகிச்சை

[order is corrected as per this court office order No. 20/2024 21.11.24

மூலம் சரி செய்ய முதுகில் துளையிட்டு மிகுந்த துன்பம் ஏற்பட்டது. என் இருபக்க அக்குளில் தலா இரண்டு துறைகளிட்டு எனக்கு உடலுக்குள் ஏற்பட்ட ரத்தக்கசிவு மற்றும் ரத்த உறைவு வெளியேற சிகிச்சை தரப்பட்டது. கபாலத்திலும், மூளையிலும் ஏற்பட்ட ரத்தக் கசிவு மற்றும் உறைந்த ரத்தத்தை மூக்கு வழியாக குழாய் சொருக்கப்பட்டு வெளியேற வழி செய்யப்பட்டது. அதன் காரணமாக 04.12.2021 முதல் 22.12.2021 வரையான 19 நாட்களும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற போது, நான் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் வேதனை அடைந்தேன். சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய பின்னரும் நான் கழுத்து வேதனையால் அவதிப்பட்டேன். மறதியாலும் மிகுந்த சிரமப்பட்டேன். அதனால் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் MRI ஸ்கேன் எடுக்கப்பட்டது. மேலும், மேல்சிகிச்சைக்காக சென்னை, பழைய மஹாபலிபுரம் சாலையிலுள்ள அப்பல்லோ மருத்துவமனையில் 18.01.2022 முதல் 24.01.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு, அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை முடிந்த பின்னர் நான் House Surgeon ஆக பணிபுரிந்தாலும் விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் ஏற்பட்ட ஊனங்களாலும், உடல் உபாதைகளாலும் மிகுந்த சிரமத்திற்குள்ளானேன். எனக்கு பார்வை குறைபாடும், கையெழுத்து மாறுதலும் ஏற்பட்டது. எனக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டது எனத் தெரிவித்துள்ளார். அது வகைக்கு, மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.2 முதல் ம.சா.ஆ.4 வரையான ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கையில், விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக மனுதாரர் திவ்யபாலா 4.12.2021 முதல் 22.12.2021 வரையான 19 நாட்கள் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளது தெரிய வருகிறது. மேலும், ம.சா.ஆ.12 ஆவணத்தை கவனமாக பரிசீலிக்கையில், விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக மனுதாரர் திவ்யபாலாவிற்கு MRI ஸ்கேன் எடுக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், ம.சா.ஆ.13 ஆவணத்தை கவனமாக பரிசீலிக்கையில், விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் மனுதாரர் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் 18.01.2022 முதல் 24.01.2022 வரை

உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளதும், அங்கு அவருக்கு 19.01.2022-ல் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. மேலும், ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவமனை மற்றும் மருந்து பில்களின் தொகுப்பாக ரூ.4,21,126.48/- செலவானதாக மருந்து பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது வகைக்கு, ம.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> "நான் விபத்தில் காயமடைந்தவுடன் திருநெல்வேலி மருத்துவகல்லூரி மருத்துவமனையில் 04.12.2021 முதல் 22.12.2021 வரை சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு சென்னையில் உள்ள அப்போலா மருத்துவமனையில் 18.01.2022 முதல் 24.01.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அதன்பிறகு வேறு எந்த மருத்துவமனையிலும் உள்நோயாளியாக சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயங்கள் வெளிகாயங்கள் ஆறிவிட்டது என்றால் சரிதான். அப்போலா மருத்துவமனையில் ம.சா.ஆ.5-ல் வரிசை எண்.26,27,28,29 ஆகியவற்றில் காண்பிக்கப்பட்ட தொகைகள் அப்போலா மருத்துவமனைக்கு செலுத்தப்பட்ட தொகையாகும். அதில் மொத்த தொகை ரூ.3,58,647/- ஆகும். அதில் ரூ.85,995/- United India Insurance Company-ஆல் செலுத்தப்பட்டது. மீதியுள்ள தொகைகள் நாங்கள் செலுத்தினோம். மேற்படி மருந்து பில்களான அனைத்து தொகைகளும் United India Insurance Company-ல் பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான்".

என சாட்சியமளித்துள்ளதை கவனமாக பரிசீலிக்கையில், மேற்படி ம.சா.ஆ.5 ஆவணத்தில் ரூ.4,21,126.48/- செலவானதாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி பில்களின் தொகுப்பில் வரிசை எண்.26,27,28,29 ஆகியவற்றில் காண்பிக்கப்பட்ட தொகைகள் அப்போலா மருத்துவமனைக்கு செலுத்தப்பட்ட தொகையாகும். மேற்படி தொகையில் ரூ.85,995/- United India Insurance Company-ஆல் செலுத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, மேற்படி மொத்த பில்களின் தொகுப்பான ரூ.4,21,126.48/-ல் ரூ.85,995/-ஐ கழித்தது போக மீதமுள்ள ரூ.3,35,131.48/- மனுதாரரால் மருத்துவ செலவாக வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேற்படி தொகை முழுமையாக்கப்பட்டு,

ரூ.3,35,131 /- மனுதாரருக்கு மருத்துவ செலவாக கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

31) மேலும், மாவட்ட மருத்துவக்குழு மனுதாரரை மருத்துவ பரிசோதனை செய்து ம.சா.ஆ.15 ஊனச் சான்றிதழ் வழங்கியுள்ளது. அதை மிக கவனமாக பரிசீலிக்கையில், அதில் மனுதாரருக்கு 40 விழுக்காடு ஊனம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஊனமானது தற்காலிக ஊனம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விபத்து காலத்திற்கான பொருளாதார அடிப்படையிலும், நியாய தர்ம அடிப்படையிலும் 1 சதவீத ஊனத்திற்கு ரூ.7,000/- இழப்பீடு கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து, 40% x ரூ.7,000/- = ரூ.2,80,000/- கிடைக்கதக்கது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

32) மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயங்களின் போது மனுதாரர் சிகிச்சைக்காக சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவாக ரூ.10,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. மேலும், மனுதாரர் மருத்துவமனையில் இருந்த வகையில் அவருக்கு உதவியாளர் ஒருவர் தேவைப்பட்டிருப்பார் என கருதி, உதவியாளர் செலவாக ரூ.25,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. மேலும், மனுதாரர் சிகிச்சையில் இருந்த காலத்தில் அவர் ஊட்டச்சத்து உட்கொண்ட வகையில் அவருக்கு ஊட்டச்சத்து உணவாக ரூ.20,000/- கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களினால் அவருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனை, துன்பம், துயரம், ரன அவதி, மன உளைச்சல் மற்றும் மன அயற்ச்சி ஆகியவைகளுக்காக வேண்டி மனுதாரருக்கு ரூ.2,50,000/- கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. எனவே, மனுதாரருக்கு கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

| வரிசை எண் | தலைப்பு | தொகை |
|---|---|---|
| 1 | மருத்துவமனை மற்றும் மருந்து பில்கள் | **ரூ.3,35,131 /-** |
| 2 | வருமான இழப்பு 40% x ரூ.7,000/- | ரூ. 2,80,000/- |
| 3 | போக்குவரத்து செலவு | ரூ. 10,000/- |
| 4 | உதவியாளர் செலவு | ரூ. 25,000/- |
| 5 | ஊட்டச்சத்து உணவு | ரூ. 20,000/- |
| 6 | வலி மற்றும் வேதனை, துன்பம், துயரம், ரன அவதி, மன உளைச்சல் | ரூ. 2,50,000/- |
| | மொத்த இழப்பீட்டு தொகை | **ரூ.9,20,131/-** |

33. மேற்படி விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டி 10 விழுக்காடும், 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் 90 விழுக்காடும் கூட்டுப் பொறுப்பாளிகள் என பிரச்சனை 1-ல் தீர்வு காணப்பட்டுள்ளதின் அடிப்படையில், மேற்படி, 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரின் காப்பீடுதாரர் என்ற முறையில் 2-ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே, மொத்த இழப்பீடு தொகை **ரூ.9,20,131/-**இல் மனுதாரரின் பங்களிப்பிற்காக 10 விழுக்காடு தொகை ரூ.92,013/- கழித்தது போக, 1-ம் எதிர்மனுதாரரின் காரின் ஓட்டுநரின் பங்களிப்பிற்காக 90 விழுக்காடு தொகை **ரூ.8,28,118/-ஐ** மனுதாரருக்கு, **1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ வழங்க உத்தரவிடப்படுகிறது. அவ்வாறே பிரச்சனை எண். 2-க்கு தீர்வு காணப்படுகிறது.**

**இறுதியாக, இந்த மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ** MCOP.No.1478/2022 **மனுவின் மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீடாக ரூ.63,81,965/-ஐ இம்மனு தாக்கல் செய்த 28.09.2022 ஆம் தேதி முதல் முழு தொகையும் வைப்பீடு செய்யும் காலம் வரை** (excluding the period of dismissal for default if any) **ஆண்டு**

ஒன்றுக்கு 7.5 சதவீத பின் வட்டி மற்றும் செலவுத் தொகை சேர்த்து இரண்டு மாத காலத்திற்குள் இந்நீதிமன்ற வங்கிக் கணக்கான V3ADJT<MCOP1478OF2022> of Indian Bank, Veeraraghavapuram Branch, Tirunelveli Junction, (IFSC Code IDIB000T105, MICR Code 627019004)-ல் RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்ட உடன் மொத்த இழப்பீட்டுத் தொகை **ரூ.63,81,965/-**இல் 1-ம் மனுதாரர் ரூ.30,81,965/-மும், 2-ம் மனுதாரர் ரூ.30,00,000/-மும், 3-ம் மனுதாரர் ரூ.3,00,000/-மும் பிரித்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகை வங்கியில் செலுத்தப்பட்ட உடன் 1 முதல் 3 மனுதாரர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை முழுவதையும் முதல் தவணையிலேயே பெற்றுக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் **ரூ.83,319/-** என நிர்ணயிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணம், வழக்கறிஞர் கட்டணம், செலவுத் தொகை ஆகியவற்றை மனுதாரர்களுக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.

MCOP.No.1478/2022 மனுவில் மனுதாரர்கள், நீதிமன்ற கட்டணம் ரூ.375/- செலுத்திவிட்டு பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க தமிழ்நாடு மோட்டார் வாகன சட்ட விதி 24(3)-ன் கீழ் தனியாக விண்ணப்பித்துள்ளார்கள். நீதிமன்ற கட்டணம் **ரூ.63,192/-** நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய எஞ்சிய நீதிமன்ற கட்டணம் **ரூ.62,817/-**ஐ மனுதாரர்கள் தீர்வத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்தி வைக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள் பாக்கி நீதிமன்ற கட்டணத்தை செலுத்தினால் தவிர, அவர்கள் இழப்பீட்டு தொகை பெறுவதற்கு உரிமை உடையவர்கள் ஆகார்.

இறுதியாக, இந்த மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ MCOP.No.1480/2022 மனுவின் மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீடாக **ரூ.63,81,965/-ஐ**

[order is corrected as per this court office order No. 20/2024 dt. 21.11.24]

இம்மனு தாக்கல் செய்த 28.09.2022 ஆம் தேதி முதல் முழு தொகையும் வைப்பீடு செய்யும் காலம் வரை (excluding the period of dismissal for default if any) ஆண்டு ஒன்றுக்கு 7.5 சதவீத பின் வட்டி மற்றும் செலவுத் தொகை சேர்த்து இரண்டு மாத காலத்திற்குள் இந்நீதிமன்ற வங்கிக் கணக்கான V3ADJT<MCOP1480OF2022> of Indian Bank, Veeraraghavapuram Branch, Tirunelveli Junction, (IFSC Code IDIB000T105, MICR Code 627019004)-ல் RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்ட உடன் மொத்த இழப்பீட்டுத் தொகை **ரூ.63,81,965/-**இல் 1-ம் மனுதாரர் ரூ.30,81,965/-மும், 2-ம் மனுதாரர் ரூ.30,00,000/-மும், 3-ம் மனுதாரர் ரூ.3,00,000/-மும் பிரித்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகை வங்கியில் செலுத்தப்பட்ட உடன் 1 முதல் 3 மனுதாரர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை முழுவதையும் முதல் தவணையிலேயே பெற்றுக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் **ரூ.83,319/-** என நிர்ணயிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணம், வழக்கறிஞர் கட்டணம், செலவுத் தொகை ஆகியவற்றை மனுதாரர்களுக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.

47,94,300/-   27,94,300/-   15,00,000/-   5,00,000/-   67,443/-

MCOP.No.1480/2022 மனுவில் மனுதாரர்கள், நீதிமன்ற கட்டணம் ரூ.375/- செலுத்திவிட்டு பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க தமிழ்நாடு மோட்டார் வாகன சட்ட விதி 24(3)-ன் கீழ் தனியாக விண்ணப்பித்துள்ளார்கள். நீதிமன்ற கட்டணம் **ரூ.63,192/-** நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய எஞ்சிய நீதிமன்ற கட்டணம் **ரூ.62,817/-**ஐ மனுதாரர்கள் தீர்வத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்தி வைக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள் பாக்கி நீதிமன்ற கட்டணத்தை செலுத்தினால் தவிர, அவர்கள் இழப்பீட்டு தொகை பெறுவதற்கு உரிமை உடையவர்கள் ஆகார்.

47,316/-   46,941/-

இறுதியாக, இந்த மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ

[order is corrected as per this court office note No. 20/2024 dt. 21.11.24

III ADJ

MCOP.No.1481/2022 மனுவின் மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக **ரூ.8,28,118/-ஐ** இம்மனு தாக்கல் செய்த 29.09.2022 ஆம் தேதி முதல் முழு தொகையும் வைப்பீடு செய்யும் காலம் வரை (excluding the period of dismissal for default if any) ஆண்டு ஒன்றுக்கு 7.5 சதவீத பின் வட்டி மற்றும் செலவுத் தொகை சேர்த்து இரண்டு மாத காலத்திற்குள் இந்நீதிமன்ற வங்கிக் கணக்கான V3ADJT<MCOP1481OF2022> of Indian Bank, Veeraraghavapuram Branch, Tirunelveli Junction, (IFSC Code IDIB000T105, MICR Code 627019004)-ல் RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகை வங்கியில் செலுத்தப்பட்ட உடன் மொத்த இழப்பீட்டுத் தொகை **ரூ.8,28,118/-** முழுவதையும் முதல் தவணையிலேயே மனுதாரர் பெற்றுக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் **ரூ.26,062/-** என நிர்ணயிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணம், வழக்கறிஞர் கட்டணம், செலவுத் தொகை ஆகியவற்றை மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.

MCOP.No.1481/2022 மனுவில் மனுதாரர், நீதிமன்ற கட்டணம் ரூ.200/- செலுத்திவிட்டு பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க தமிழ்நாடு மோட்டார் வாகன சட்ட விதி 24(3)-ன் கீழ் தனியாக விண்ணப்பித்துள்ளார். நீதிமன்ற கட்டணம் **ரூ.7,654/-** நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய எஞ்சிய நீதிமன்ற கட்டணம் **ரூ.7,454/-ஐ** மனுதாரர் தீர்வத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்தி வைக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் பாக்கி நீதிமன்ற கட்டணத்தை செலுத்தினால் தவிர, அவர் இழப்பீட்டு தொகை பெறுவதற்கு உரிமை உடையவர் ஆகார்.

**மனுதாரர்கள் தரப்பு செலவு விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | முத்திரை கட்டணம் | ரூ. 950.00 |
| 2 | வக்காலத்தில் வில்லை | ரூ.30.00 |

[signature]

| | | |
|---|---|---|
| 3 | கட்டளைபடி | ரூ.40.00 |
| 4 | சான்றாவணத்தில் வில்லை | ரூ.225.00 |
| | மொத்தம் | ரூ. 1244. 00 |

இந்த தீர்வமானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

20/11/24

மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,
(3 வது கூடுதல் மாவட்ட நீதிபதி)
திருநெல்வேலி .

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி**

1. ம.சா.1 - செல்வி. K. திவ்யபாலா
2. ம.சா.2 - திருமதி, ராணிமேரி நேசமணி
3. ம.சா.3 - திரு. பொன்னுதுரை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

1. ம.சா.ஆ.1 - முதல் தகவல் அறிக்கை உண்மை நகல்
2. ம.சா.ஆ.2 - திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டிஸ்சார்ஜ் சம்மரி நகல்
3. ம.சா.ஆ.3 - விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று நகல்
4. ம.சா.ஆ.4 - மருத்துவ சீட்டு மற்றும் லேப் அறிக்கை
5. ம.சா.ஆ.5 - மருந்து பில்கள் (ரூ.4,21,126.68)
6. ம.சா.ஆ.6 - திவ்யபாலா வங்கி கணக்கு புத்தகம் நகல்
7. ம.சா.ஆ.7 - திவ்யபாலா ஆதார் நகல்
8. ம.சா.ஆ.8 - திவ்யபாலா பான்கார்டு நகல்
9. ம.சா.ஆ.9 - திருநெல்வேலி மருத்துவகல்லூரி மருத்துவமனை அனுமதி சீட்டு

10. ம.சா.ஆ.10- திவ்யபாலா விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று நகல்
11. ம.சா.ஆ.11 - காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்
12. ம.சா.ஆ.12- CT Scan and MRI Scan Report
13. ம.சா.ஆ.13- அப்போலா மருத்துவமனை டிஸ்சார்ஜ் சம்மரி நகல்
14. ம.சா.ஆ.14- எக்ஸ்ரே
15. ம.சா.ஆ.15- ஜனனச் சான்றிதழ்
16. ம.சா.ஆ.16- ப்ரீடா ஏஞ்சலின் ராணி பிரேத பரிசோதனை அறிக்கை நகல்
17. ம.சா.ஆ.17- காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்
18. ம.சா.ஆ.18- ப்ரீடா ஏஞ்சலின் ராணி வாரிசு சான்று நகல்
19. ம.சா.ஆ.19- ப்ரீடா ஏஞ்சலின் ராணி 10 ம் வகுப்பு மதிப்பெண் சான்று நகல்
20. ம.சா.ஆ.20- ப்ரீடா ஏஞ்சலின் ராணி 12 ம் வகுப்பு மதிப்பெண் சான்று நகல்
21. ம.சா.ஆ.21- ப்ரீடா ஏஞ்சலின் ராணி ஹிந்தி சான்றிதழ் நகல்
22. ம.சா.ஆ.22- ப்ரீடா ஏஞ்சலின் ராணி ஆதார் கார்டு நகல்
23. ம.சா.ஆ.23- MCOP.NO.1478/2022 மனுவின் மனுதாரர்கள் ஆதார் கார்டு நகல் (3 எண்ணம்)
24. ம.சா.ஆ.24- MCOP.NO.1478/2022 மனுவின் மனுதாரர்கள் பான் கார்டு நகல் (3 எண்ணம்)
25. ம.சா.ஆ.25- ப்ரீடா ஏஞ்சலின் ராணி நீட் ரிசல்ட் நகல்
26. ம.சா.ஆ.26- பொன். திவ்யா காயத்ரி பிரேத பரிசோதனை அறிக்கை நகல்
27. ம.சா.ஆ.27- பொன். திவ்யா காயத்ரி வாரிசு சான்று நகல்
28. ம.சா.ஆ.28- பொன். திவ்யா காயத்ரி இறப்பு சான்று நகல்
29. ம.சா.ஆ.29- இருசக்கர வாகனத்தின் ஆர்.சி.புத்தகம் நகல்
30. ம.சா.ஆ.30- இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்
31. ம.சா.ஆ.31- பொன். திவ்யா காயத்ரி Excellance சான்று நகல்
32. ம.சா.ஆ.32- பொன். திவ்யா காயத்ரி வங்கி கணக்கு புத்தகம் நகல்
33. ம.சா.ஆ.33- பொன். திவ்யா காயத்ரி நீட் ரிசல்ட்
34. ம.சா.ஆ.34- பொன். திவ்யா காயத்ரி MBBS Admission Slip
35. ம.சா.ஆ.35- பொன். திவ்யா காயத்ரி அடையாள அட்டை நகல்
36. ம.சா.ஆ.36- பொன். திவ்யா காயத்ரி ஆதார் நகல்
37. ம.சா.ஆ.37- MCOP.NO.1480/2022 மனுவின் மனுதாரர்கள் ஆதார் கார்டு நகல்

(3 எண்ணம்)

38. ம.சா.ஆ.38- MCOP.NO.1480/2022 மனுவின் மனுதாரர்கள் வங்கி கணக்கு புத்தகம் நகல் (3 எண்ணம்)

39. ம.சா.ஆ.39- MCOP.NO.1480/2022 மனுவின் 1 மற்றும் 2 மனுதாரர்கள் பான்கார்டு நகல் (2 எண்ணம்)

40. ம.சா.ஆ.40- பொன். திவ்யா காயத்ரி 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

20/11/24

மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,

(3 வது கூடுதல் மாவட்ட நீதிபதி)

திருநெல்வேலி.

மோட்டார் வாகன விபத்துக்கள்
கோருரிமை தீர்ப்பாயம்/
3 வது கூடுதல் மாவட்ட
நீதிமன்றம், திருநெல்வேலி.

எம்.சி.ஓ.பி.எண்கள்.1478/2022,
1480/2022 மற்றும் 1481/2022
நாள் 20.11.2024
வரைவு/சீரான உத்தரவு